# அசல் சினிமாவில் தமிழருக்கான அடையாளம்…

2019, மார்ச், 11-ஆம் தேதி, திங்கட்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் தமிழ்த்துறை சார்பில் முத்தமிழ்ப் பேரவை விழா வெகு சிறப்பாக நடந்தது. விருதுகளை அள்ளிக் குவித்த ‘டுலெட்’ - திரைப்படத்தின் கதாநாயகன் சந்தோஷ் நம்பிராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாடியது மாணவர்களைப் பெருமளவில் கவர்ந்தது.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சி.ஆர். மஞ்சுளா வரவேற்புரையில் சிறப்பு விருந்தினரின் கலைச்சேவையை அழுத்தமாகக் குறிப்பிட்டார். கல்லூரித் தலைவர் முனைவர் அ.மு. சுவாமிநாதன் தலைமையில் மாணவர்களின் படைப்பு தாங்கிய ‘தகளி’ இதழை வெளியிட்டதுடன் தன் கல்லூரி ஆண்டு மலரின் நினைவுகளை மலரும் நினைவுகளாகப் பகிர்ந்து கொண்டார் நடிகர் சந்தோஷ். தொலைந்த பொருள் பொக்கிஷமாக நம்மால் நினைக்கப்படும் என்ற தத்துவத்தையும் பேச்சுவாக்கில் உதிர்த்தார்.



**“கருத்து சொல்வதற்கு என்ன தகுதி நம்மிடம் உள்ளது, அதனால்தான் வாழ்க்கையைச் சொல்கிறோம், அதுவே அசல் சினிமா” என்கிறார் சந்தோஷ். அது காலத்தால் அழியாத கலை என்றும் எது உங்களைக் கேள்வி கேட்க வைக்கிறதோ அது நல்ல படைப்பு என்றும் முடித்துக் கொண்டார். நான் நடித்த திரைப்படத்தை மக்கள் பார்ப்பதையே பெரிய விருதாகக் கருதுகிறேன் என்று பேசும் இவர் ‘டுலெட்’ - படத்தின் வழியாகத் தமிழன் இப்படித்தான் இருப்பான் என்று தன்னை ஒரு தமிழனுக்கான அடையாளமாக உலக மக்கள் காண்கின்றனர் என்பதையும் பெருமிதத்துடன் பகிர்ந்து கொண்டார். நம் வாழ்க்கை பயனுடையதாக இருக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த இளவயதில் உங்களையே நீங்கள் கேட்டுக் கொண்டு அதற்கான வேலையைப் பாருங்கள் என்ற வேண்டுகோளையும் மாணவர்களிடம் விடுத்தார்.**

கவிதைப் போட்டிக்கு நடுவராக இருந்து மூன்று முத்தாய்ப்பான கவிதைகளைத் தேர்ந்தெடுத்த ஆவணப்பட இயக்குநர் அமீர் அப்பாஸ் இந்த உலகத்தில் வன்முறை ஒழிய வேண்டும் என்பதை மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் கவி வரிகள் கொண்டு உணர்த்தினார். முன்னதாக மாணவர்களின் கவிதைகளுக்கான விமர்சனத்தையும் பதிவு செய்துவிட்டு அசல் சினிமா வெளிவரவேண்டிய அவசியத்தையும் கூறினார்.

நிறைவாக வாழ்த்துரை வழங்கிய கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இராஜா சாமுவேல் திரைத்துறையைச் சார்ந்தவர்களின் உரையாடல் மூலம் தான் கலைகளைப் பற்றி நிறைய கற்றுக் கொண்டதாக மனந்திறந்து பாராட்டினார். இன்றைய நிலையில் தேசபக்தி என்பது ஆரவாரமாக வெளிப்படுகிறது. ஆனால் நம் கல்லூரி மாணவர்கள் எளிய விஷயத்திலும் தேசபக்தியைக் காட்ட முடியும் என்று கவிதை வழி உணர்த்தியதைப் பலமாகப் பாராட்டினார்.

மாணவர்கள் எழுப்பிய அனைத்துக் கேள்விகளுக்கும் நடிகர் சந்தோஷ் திறமையாகவும் பொறுமையாகவும் பதில் சொன்ன நிகழ்ச்சி நாட்டுப்பண்ணுடன் நிறைவு பெற்றது.


TAG - MSSW AUDITORIUM
சென்னை சமூகப்பணி கல்லூரி (தன்னாட்சி)